**F.No.14011/4/2017-HRD**
**இந்திய அரசு**
**எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY)**

**பொருள்: பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் (PMGDISHA) திட்டத்தின் வழிமுறைகள்**

1.0 **திட்டத்தின் பெயர்:** பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் (PMGDISHA)

2.0 **டிஜிட்டல் கல்வி விளக்கம்:** "டிஜிட்டல் கல்வி என்பது வாழ்க்கை சூழ்நிலைகளில் பயனுள்ள வேலைகளுக்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்களை புரிந்துகொள்ளும் மற்றும் பயன்படுத்தும் தனிநபர்கள் மற்றும் சமூகங்களின் திறமையாகும்".

3.0 **நோக்கங்கள்:**

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் எங்கிலுமுள்ள கிராமப்புற பகுதிகளில் தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திலிருந்து ஒரு உறுப்பினர் என்ற விதத்தில் சுமார் 40% கிராமப்புற குடும்பங்களை சென்றடைந்து **ஆறு கோடி** பேர்களை டிஜிட்டல் கல்வியறிவு உள்ளவர்களாக ஆக்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிராமப்புறங்களில் உள்ள குடிமக்களுக்கு கம்ப்யூட்டர் அல்லது டிஜிட்டல் அணுகல் சாதனங்களை (டேப்லட்டுகள், ஸ்மார்ட் போன்கள் போன்றவற்றை) ஆப்பரேட் செய்வது இமெயில்களை அனுப்புவது மற்றும் பெறுவது, இன்டர்நெட்டை புரவுஸ் பண்ணுவது, அரசு சேவைகளை அணுகுவது, தகவல்களை தேடுவது, டிஜிட்டல் முறையில் பணப் பரிவர்த்தனை செய்வது போன்றவை குறித்து பயிற்சியளித்து இதன் மூலம் அவர்களை தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான பயன்பாட்டகங்கள் குறிப்பாக டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துதல் போன்றவற்றை பயன்படுத்த அவர்களுக்கு உதவி செய்து தேசத்தை கட்டி எழுப்பும் செயலில் அவர்களை தீவிரமாக பங்கேற்க வைக்க இத்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் (SC) / பழங்குடியினர் (ST), வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் (BPL), பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுபான்மையினர்கள் போன்ற சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினர்கள் உட்பட அனைத்து கிராமப்புற மக்களை இலக்காக கொண்டு டிஜிட்டல் இடைவெளியை நீக்க திட்டமிட்டுள்ளது.

4.0 **செயல்படுத்தும் நிறுவனம்:**

அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகிகளின் தீவிர ஒத்துழைப்புடன் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் 1956 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்ட ஒரு சிறப்பு முதலீட்டு நிறுவனமான (இதன் பிறகு இது 'CSC-SPV' என அழைக்கப்படும்) சிஎஸ்சி இ-கவர்னன்ஸ் சர்வீசஸ் இந்தியா லிமிட்டெட் என்ற நிறுவனத்தினால் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

5.0 **காலம்:**

இத்திட்டம் 2019 மார்ச் 31 வரை செயல்பாட்டில் இருக்கும்.

6.0 **இலக்கிடப்பட்ட பயனாளிகள்:**

- **தகுதியான குடும்பத்தார்:** ஒரு குடும்பத்தார் என்றால் குடும்ப தலைவர், மனைவி, குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் அடங்கிய ஒரு குழுவை குறிக்கிறது. டிஜிட்டல் கல்வியறிவே இல்லாத குடும்ப உறுப்பினர்களை கொண்ட குடும்பத்தார் இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள குடும்பத்தாராக கருதப்படுவார்கள்.
- **நுழைவுக்கான அளவுகோல்கள்**
  i. பயனாளி டிஜிட்டல் கல்வியறிவில்லாதவராக இருக்க வேண்டும்

ii. தகுதியுள்ள குடும்பத்தாரிலிருந்து ஒரே ஒரு நபருக்கு மட்டுமே பயிற்சியளிக்கப்படும்
iii. வயது வரம்பு: 14 - 60 வயது

- பின்வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
    - ஸ்மார்ட்போன் பயன்படுத்தாதவர்கள், நலிவடைந்த குடும்பங்கள், கல்லூரி படிப்பை கைவிட்டவர்கள், வயது வந்தோர் கல்விப் பணி பங்கேற்பாளர்கள்
    - கம்ப்யூட்டர்/தகவல் தொடர்பு தொழில்நுட்ப பயிற்சி வசதி இல்லாத பள்ளிக்கூடங்களில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்த டிஜிட்டல் கல்வி அறிவில்லாத பள்ளி மாணவர்கள்
- SC, ST, BPL, பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுபான்மையினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
- DeGS, கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் தீவிர ஒத்துழைப்புடன் CSC-SPV பயனாளர்களை தேர்ந்தெடுக்கும். பயனாளிகளின் பட்டியல் திட்டத்தின் போர்டலில் வெளியிடப்படும்.

## 7.0 பின்னணி:

அரசு இந்தியாவை ஒரு டிஜிட்டல் வளம்மிக்க சமுதாயமாக மற்றும் பொருளாதார அறிவுள்ள நாடாக மாற்றும் ஒரு லட்சிய நோக்கில் டிஜிட்டல் இந்தியா திட்டத்தை துவங்கியுள்ளது. இத்திட்டம் குடிமக்களை பல்வேறு மின்-ஆளுமை செயல்திட்டங்களில் இணைத்து பொது பங்கேற்பை வலுப்படுத்துவதற்கான தீர்மானங்களை எடுப்பதில் அவர்களை ஈடுபடுத்தி அதன்மூலம் ஆட்சி பொறுப்பை மேம்படுத்தவும் முயற்சிக்கிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் அவன் இருக்கும் இடம் மற்றும் சமூகப் பின்னணி குறித்த பாகுபாடு இல்லாமல் டிஜிட்டல் சேவைகள்/தொழில்நுட்பங்களை பெறும் மற்றும் செயல்படுத்தும் வாய்ப்புகளை மற்றும் திறன்களை கொடுத்தால் மட்டுமே டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் முழு சக்தியையும் நம்மால் புரிந்துகொள்ள இயலும். கிராமப்புற இந்தியா உட்பட நாடு முழுவதும் உலகளாவிய டிஜிட்டல் கல்வியறிவை உருவாக்குதே இந்த செயல்திட்டங்களின் வெற்றிக்கு அவசியமான காரியமாகும்.

அரசு குடிமக்களுக்கு டிஜிட்டல் கல்வியறிவை வழங்குவதற்காக ஒரு சிறப்பு முதலீட்டு நிறுவனமான (CSC-SPV) (1956 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பொது நிறுவனம்) சிஎஸ்சி இ-கவர்னன்ஸ் சர்வீசஸ் இந்தியா லிமிட்டெட் நிறுவனத்தால் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் டிஜிட்டல் கல்வியறிவை வழங்கும் தேசிய டிஜிட்டல் எழுத்தறிவு திட்டம் (NDLM) மற்றும் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் (DISHA) என்ற இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த இரண்டு திட்டங்களின் கீழ் உரிய முறையில் சான்றிதழ் அளிக்கப்பட்ட 52.5 லட்சம் பயனாளிகளுக்கு டிஜிட்டல் கல்வியறிவை வழங்கும் இலக்கை டிசம்பர் 2016 இல் அடைந்துள்ளது, டிசம்பர் 2018 க்குள் அடைய வேண்டுமென்று முன்வைக்கப்பட்ட இலக்கை நோக்கி பயனிக்கிறது.

மாண்புமிகு நிதி அமைச்சர் 2016-17 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை வழங்கும் போது, இடையிடையே அறிவித்ததாவது:

***"நமது மக்கள்தொகையை பயன்படுத்தி நாம் பெருமளவில் பயன் பெற வேண்டும். கிராமப்புற இந்தியாவில் டிஜிட்டல் கல்வியறிவை பரப்ப வேண்டும். 16.8 கோடி கிராமப்புற குடும்பங்களில், 12 கோடி வீடுகளில் கம்ப்யூட்டர் இல்லை மேலும் டிஜிட்டல் கல்வியறிவுள்ளவர்களும் இல்லை. டிஜிட்டல் கல்வியை ஊக்குவிக்க நாம் ஏற்கனவே தேசிய டிஜிட்டல் எழுத்தறிவு திட்டம் மற்றும் டிஜிட்டல் சக்ஸர்தா அபியான் என்ற இரண்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறோம்:. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் கூடுதலாக சுமார் 6 கோடி குடும்பங்களை சென்றடைய கிராமப்புற இந்தியாவில் ஒரு புதிய டிஜிட்டல் கல்வியறிவு செயல் திட்டத்தை துவங்க நாம் இப்போது திட்டமிட்டுள்ளோம். இந்த திட்டத்தின் விபரங்கள் தனித்தனியாக தெரிவிக்கப்படும்."***

தற்போதைய திட்டம் மாண்புமிகு நிதி அமைச்சர் மேலே குறிப்பிட்ட பட்ஜெட் அறிவிப்பை பின்பற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் கல்வி என்பது "டிஜிட்டல் இந்தியா செயல்திட்டத்தின்" கீழ் திட்டமிட்டது போல ஒரு வளமான சமுதாயத்தை உருவாக்கும் அரசின் எதிர்கால தரிசனத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். குறிப்பாக கிராமப்புற இந்திய சூழலில் டிஜிட்டல் கல்வியின் பயனுள்ள தாக்கங்களானது சமூக

பொருளாதார பிரச்சினைகள் பலவற்றை தீர்க்கும். 'டிஜிட்டல் கல்வி' ஆனது குறிப்பாக உடல்நலம், வாழ்வாதாரத்தை உருவாக்குதல் மற்றும் கல்வி போன்ற பிரிவுகளில் கிராமப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையில் தகவல் தொடர்பு தொழில்நுட்ப நன்மைகளை கொண்டு வரும்.

மேலும், மொபைல் போன்கள் மூலம் பணமில்லா பரிவர்த்தனைகளை செய்வதை ஊக்குவிப்பதே அரசின் நோக்கமாக இருப்பதனால், பாடப் பயிற்சியின் உள்ளடக்கமானது மின்னணு முறையில் பணம் செலுத்தும் முறைக்கான டிஜிட்டல் நிதி ஆயுதங்களை பயன்படுத்துவது குறித்தே அதிகமாக வலியுறுத்தும்.

## 8.0 திட்டம் செயல்படுத்தப்படும் பகுதி

இத்திட்டம் நாட்டின் கிராமப்புறப் பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும். இத்திட்டத்தை நமது நாட்டில் பயனுள்ள விதத்தில் செயல்படுத்த, சராசரி எண்ணிக்கையிலான கிராமப்புற குடும்பங்களுக்கு கிடைப்பதன் அடிப்படையில் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கான குறிப்பான புரோ ராடா சார்ந்த இலக்குகள் **இணைப்பு-I** இல் உள்ள விவரங்கள் படி இருக்கும். ஒரு மாநிலம்/யூனியனுக்கு குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் அறிவிப்பு ரிதியானவையே மற்றும் அவர்களின் செயல்பாட்டை பொறுத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கான உயர் இலக்குகளில் வளைந்து கொடுக்கும் தன்மை காணப்படும். நகர்ப்புறத்தின் அங்கமாக இருக்கும் பஞ்சாயத்துகள் இத்திட்டத்தில் சேராது. இதுபோன்ற பஞ்சாயத்துகள் தொழிற்சாலைகள் /நிறுவனங்களின் CSR நடவடிக்கைகளில் கவர் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் சம அளவில் இடங்கள் கவர் செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்த 2.50 லட்சம் கிராமப் பஞ்சாயத்துகள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்படும் இலக்குகளுடன் சேர்த்து ஒரு கிராம பஞ்சாயத்தை மையப்படுத்திய அணுகுமுறை பின்பற்றப்படும். ஒரு கிராம பஞ்சாயத்து சராசரியாக 200-300 பயனாளிகள் என்ற ஒரு இலக்கில் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதி தலைமையிலான மாவட்ட மின்-ஆளுமை சங்கம் (DeGS) மாவட்டத்தின் அளவு, மக்கள் தொகை, உள்ளூர் தேவைகள் முதலியவற்றை கருத்தில் கொண்டு, கிராம பஞ்சாயத்துக்கான உண்மையான இலக்கை தீர்மானிக்கும். பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தில் வரும் கிராமங்களுக்கு முழு டிஜிட்டல் கல்வியறிவை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## 9.0 பரந்த அளவில் செயல்படுத்தும் கட்டமைப்பு

MeitY உரிய கொள்கை ஆதரவை வழங்கும் மற்றும் மத்திய அளவில் திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கும். CSC-SPV இத்திடடத்தை மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் சுமூகமாக செயல்படுத்துவதற்கு மாநில அரசு/யூனியன் பிரதேச நிர்வாகத்துடன் இணைந்து தீவிர ஒத்துழைப்புடன் செயல்படும். மாவட்ட நீதிபதி/மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மின்-ஆளுமை சங்கம் (DeGS) ஆனது PMGDISHA திட்டத்தை கடைசி எல்லை வரை செயல்படுத்த மற்றும் கண்காணிக்க முக்கிய பங்கு வகிக்கும். இத்திட்டமானது CSC-SPV-யுடன் முறையாக இணைக்கப்பட்ட CSC மையங்கள் உட்பட பயிற்சி பங்காளர்கள்/மையங்கள் மூலமாக அடிமட்ட அளவில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் முக்கிய அம்சங்கள் அடுத்துவரும் பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

9.1 NDLM/DISHA திட்டங்களில் செய்யப்பட்டது போலவே இத்திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி பங்காளர்கள்/பயிற்சி நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படும். நாடு முழுவதும் பயிற்சி பங்காளர்களை 2500 ஆக அதிகரிக்கவும் மற்றும் பயிற்சி மையங்களை (CSC மையங்கள் உட்பட) 2.5 லட்சமாக அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கேற்ப ஒப்புதலளிக்கப்பட்ட விதிகளின் படி CSC-SPV யுடன் முறையாக ஒருங்கிணைந்த பல்வேறு பயிற்சி பங்காளர்கள்/மையயங்கள் மூலம் டிஜிட்டல் கல்வி அளிக்கப்படும். CSC மையங்கள், NIELIT மையங்கள்/அங்கீகரித்த மையங்கள், MHRD-இன் கீழ் பள்ளிகள் திட்டத்தில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை செயல்படுத்தும் வயது வந்தோர்க்கான கல்வி மையங்கள் /பள்ளிக்கூடங்கள், இக்னோ மையங்கள், தகவல் தொடர்பு கல்வியில் ஈடுபட்டுள்ள அரசு சாரா அமைப்புகள், கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள், தொழில்துறை பங்காளர்கள், CSR வசதிகள் கொண்ட நிறுவனங்கள் முதலியன் இதில் அடங்கும்.

9.2 பயிற்சி பங்காளர்கள்/பயிற்சி மையங்கள் பெரும்பாலும் அதே மாநிலத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டு மற்றும் இலக்கு பகுதியில் நியமிக்கப்படுவார்கள். CSC-SPV பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் படி பயிற்சியை நடத்த பயிற்சி பங்காளர்கள்/பயிற்சி மையங்கள் அடிப்படை வசதிகளை கொண்டிருக்க வேண்டும்.

9.3 **பயிற்சி பங்குதாரர்:**

CSC-SPV இன் பயிற்சி பங்காளர்கள் பரிந்துரைக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும் என்பதனால் டிஜிட்டல் கல்வியை வழங்க விரும்பும் அரசு சாரா நிறுவனங்கள்/பெருநிறுவனங்கள் போன்ற ஒருங்கிணைந்த நிறுவனங்களே இத்திட்டத்தில் இடம்பெறும். குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் பின்வருமாறு:-

- ஒரு பயிற்சி பங்காளர் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனமாக இருக்க வேண்டும், கல்வி/தகவல் தொழில்நுட்ப கல்வியில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தொழில் செய்திருக்க வேண்டும் மற்றும் நிரந்தர வருமான வரி கணக்கு எண் (PAN) மற்றும் குறைந்தது கடந்த மூன்று ஆண்டுகளில் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை வைத்திருக்க வேண்டும்.
- நிறுவனம்/அமைப்பு ஏதேனும் இந்திய சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், உ.தா., அது ஒரு கம்பனி என்றால் கம்பனிகளின் பதிவகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும், சங்கம் என்றால் சங்கங்களின் பதிவகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் மேலும் இதே போல் அதனதன் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- பங்குதாரர் கல்வி/தகவல் தொழில்நுட்ப கல்வி முழுவதையும் உள்ளடக்கி தெளிவாக விவரிக்கப்பட்ட நோக்கங்களை, நன்கு ஆவணப்படுத்தப்பட்ட செயல்பாடுகளை மற்றும் செயல்முறைகளை கொண்டிருக்க வேண்டும்.

9.3.1 **ஒரு பயிற்சி பங்காளரின் பொறுப்பு**

- ஒரு பயிற்சி பங்காளர் பயிற்சி பெறுபவருக்கு டிஜிட்டல் கல்வியை சொல்லிக் கொடுப்பதற்கு அவருக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டம்/வட்டம்/கிராமத்தில் சொந்த பயிற்சி மையங்களை உருவாக்குவது அவரின் பொறுப்பாகும்.
- பயிற்சி மையங்கள் திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப இருக்கின்றன என்பதை ஒரு பயிற்சி பங்காளர் உறுதிப்படுத்த வேண்டும்.
- மையங்களின் ஒட்டுமொத்த செயல்பாட்டை கண்காணிக்கும் பொறுப்பு ஒரு பயிற்சி பங்காளருக்கு உள்ளது.
- ஒரு பயிற்சி பங்காளர் அவருடைய மையங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட வேலை குறித்து மிகச் சரியாகவும் சரியான நேரத்திலும் தகவல் தெரிவிக்க வேண்டும்
- பயிற்சி பங்குளர்களுக்கான விரிவான விதிமுறைகள் CSC-SPV வெளியிட்ட ஸ்டேண்டர்டு ஆப்ரேட்டிங் புரஸிஜர் படி இருக்க வேண்டும்.

9.4 **பயிற்சி மையங்கள்**

பயிற்சி பங்காளர்கள் தகுந்த ஊழியர்கள் மற்றும் தேவையான உள்கட்டமைப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் பயிற்சி மையங்கள அமைக்க வேண்டும். அவை பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்:

- ஒரு பயிற்சி மையமானது கல்வி/தகவல் தொழில்நுட்ப கல்வி பிரிவில் நிரூபிக்கப்பட்ட பயிற்சி மற்றும் வசதி சான்றுகளுடன் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஒரு அமைப்பின் அங்கமாக இருக்க வேண்டும்
- பயிற்சி பங்காளரால் அனைத்து ஆவணங்களும் நிரப்பப்பட்ட பிறகு, CSC-SPV குழு உருவாக்கிய ஒரு பரிசோதனை குழு பயிற்சி மையத்தை பார்வையிடும் மற்றும் பரிசோதனை குழு வழங்கும் திருப்தியான அறிக்கையை பெற்ற பிறகு அங்கீகாரம் வழங்கப்படும்.
- பயிற்சி மையங்களுக்கான விரிவான விதிமுறைகள் CSC-SPV வெளியிட்ட ஸ்டேண்டர்டு ஆப்ரேட்டிங் புரஸிஜர் படி இருக்க வேண்டும்.

CSC-SPV யுடன் பணியாற்றும் அனைத்து CSC மையங்களும் பயிற்சி மையமாக கருதப்படும் அதே பயிற்சி மையங்களின் விதிமுறைகள் CSC மையங்களுக்கும் பொருந்தும்.

9.4.1 **பயிற்சி மையங்களின் பொறுப்பு:** பயிற்சி மையங்களுக்கு பின்வரும் பொறுப்புகள் உள்ளன:

- பயிற்சிக்கு பயிற்சியாளர்களை சேர்த்தல்
- பயிற்சியாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்தல்
- வருகையை பதிவு செய்தல் மற்றும் ஆன்லைன் கண்காணிப்பு அப்ளிகேசன் மற்றும் கற்றல் மேலாண்மை முறையை பயன்படுத்தி தொடர்ந்து மதிப்பீடு செய்தல்
- பயிற்சியில் சேர்பவர்கள் அனைவருக்கும் ஒரு ரெக்கார்டை பராமரித்தல், அவர்களின் வருகைக்கு சான்றளித்தல் மற்றும் ஆன்லைன் தேர்வு எழுதுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துதல்.
- பயிற்சி முடிந்த பிறகு குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி மையமானது ஆதரவு மற்றும் உதவி வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு பயிற்சியாளரும் கற்று பயனடைந்துள்ளார் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**9.5** மொபைல் போன் மூலம் பாடத்தை வழங்குவது கூடுதல் வசதியாக முன்மொழியப்படுகிறது இது உடல்சார் பயிற்சி முறையின் போது கற்றுக்கொண்ட பாடத்தை நினைவுபடுத்த அதிக எண்ணிக்கையிலான நியோ-தகவல் தொழில்நுட்ப கல்வியாளர்களால் மதிப்பிடப்படும்.

**9.6** ஒவ்வொரு பயனாளியையும் அடையாளம் காணவும் மற்றும் மோசடியை தவரிக்கவும் ஆதார் எண்ணை பயன்படுத்த வேண்டும்.

**9.7** வெளிப்படைத்தன்மையை கடைபிடிப்பதற்காக பங்காளர்கள்/மையங்கள் மூலம் பயிற்சி திட்டங்களை தெரியப்படுத்த/கண்காணிக்க CSC-SPV தகுந்த விதத்தில் ஆன்லைனில் தெரியப்படுத்துதல் அமைப்பை ஏற்படுத்தும்.

**9.8** பயிற்சியின் பங்காளர்கள்/மையங்கள் இத்திட்டம் தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட விதிகளின் படி பயனாளிகளை பயிற்சி மையங்களுக்கு செல்லவும் மற்றும் வெற்றிகரமாக முடிக்கவும் ஊக்கப்படுத்த வேண்டும்.

**9.9** பயிற்சி வெற்றிகரமாக முடிந்த பிறகு, பயிற்சியின் பங்குதாரர்கள்/மையங்கள் பயிற்சி பெற்ற நபரைப் பற்றிய விபரங்களை அவ்வப்போது CSC-SPV-க்கு தெரியப்படுத்த வேண்டும்.

**9.10** பயிற்சி பெற்ற பயிற்சியாளர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட சான்றளிக்கும் நிறுவனம் நடத்தும் (விரைவில் பயிற்சி முடிந்தவுடன்) ஒரு ஆன்லைன் தேர்வை எழுத வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட முடிவு அளவுகோல்களை பூர்த்தி செய்த பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக சான்றிதழ் பெற்ற பிறகு CSC-SPV ஆனது பயிற்சி நிறுவனங்களுக்கான பயிற்சி செலவை வெளியிடும்.

**9.11** எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை தேசிய நிறுவனம் (NIELIT), திறந்த பள்ளிக்கூட தேசிய நிறுவனம் (NIOS), தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப அகாடமி (ICTACT), அரியானா அறிவு கார்ப்பரேஷன் லிமிடெட் (HKCL), தொழில்முனைவு மற்றும் சிறு தொழில் வளர்ச்சிக்கான தேசிய நிறுவனம் (NIESBUD) ஆகிய தேசிய அங்கீகாரம் பெற்ற சான்றளிக்கும் நிறுவனங்கள் நடத்தும் ஆன்லைன் தொலைதூர கண்காணிப்பு பரிட்சை மூலம் பயிற்சி பெற்ற பயனாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். ஆன்லைனில் மதிப்பீடு செய்வதில் இதே போன்ற அனுபவம் கொண்ட நிறுவனங்கள் பலவும் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின் படி சேர்க்கப்படலாம். சுமூகமான சான்றிதழ் செயல்முறையை உறுதிப்படுத்த ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்தது ஒரு சான்றளிக்கும் நிறுவனத்தையாவது அமைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

**9.12 தொழில்துறை, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மற்றவர்கள் எடுக்கும் வேறு பல தகவல் தொழில்நுட்ப கல்வி முயற்சிகளின் ஒருங்கிணைப்பு:**

நாட்டில் டிஜிட்டல் கல்வியை பரப்புவதற்காக இதேபோன்ற முயற்சியை எடுக்கும் தொழில்துறை, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் மற்றவர்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்

கொள்ளப்படுவார்கள் மற்றும் இது தொடர்பாக தேவையான ஒத்துழைப்பை CSC-SPV வழங்கும். CSC-SPV இவற்றுக்கு ஏற்பாடு செய்யும் மற்றும் இது தொடர்பான பல்வேறு பங்காளர்களை ஒருங்கிணைக்கும். இதுபோன்ற பங்காளர்கள், தொழில்துறை, அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக பயிற்சியளிக்கப்பட்ட பயிற்சியாளர்களும் அங்கீகரிக்கப்பட்ட சான்றளிக்கும் நிறுவனம் மூலம் டிஜிட்டல் கல்வி சான்றிதழ்கள் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இதுபோன்ற பயிற்சியாளர்களுக்கு அவர்களின் சொந்த வளங்கள்/நிறுவன சமூக பொறுப்புணர்வு திட்டங்கள் (CSR) நிதி மூலம் இந்த நிறுவனங்கள் பயிற்சி அளிக்கின்றன. இதுபோன்ற செயல்திட்டங்களின் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் ஒப்புதலளிக்கப்பட்ட சான்றளிக்கும் நிறுவனம் நடத்தும் சான்றிதழ் பரிட்சைகள் எழுத தகுதியுள்ளவராக இருக்கிறார் மற்றும் சான்றிதழ் கட்டணத்தை இந்த நிறுவனங்களே ஏற்றுக் கொள்ளும்.

**9.13 பல்வேறு நிறுவனங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

**9.13.1 MeitY:**

i) **அதிகார குழு** இந்த திட்டத்திலுள்ள கொள்கை அளவிலான எந்த தலையீடுகள் குறித்த தீர்மானங்களையும் எடுக்க MeitY-யின் செயலாளரின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

ii) **திட்ட மறுஆய்வு மற்றும் தீர்மானக் குழு (PRSG)** திட்டத்தை சரியான நேரத்தில் செயல்படுத்தப்படுவதையும் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிதி வழங்கப்படுவதையும் உறுதிப்படுத்த MeitY இன் JS(HR) தலைமையில் MeitY ஆல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

iii) PRSG இன் பரிந்துரை, மற்றும்/அல்லது மற்றும் MeitY இன் மதிப்பீடு மற்றும் MeitY ஒப்புதல் அளித்தது போல செயல்படுத்தும் நிறுவனத்திற்கு தேவையான நிதிகளை வழங்குதல்.

iv) இத்திட்டத்தின் வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகள், அரசுத் துறைகள்/ அமைப்புகள்/நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் ஒத்துழைப்பை விரைவுப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதலை வழங்குதல்.

v) இத்திட்டம் தொடர்பான வேறு பிரச்சினைகள் மற்றும் அம்சங்களை கையாளுதல்.

**9.13.2 திட்ட மேலாண்மை பிரிவு (PMU):**

PMGDISHA திட்டத்தை செயல்படுத்த CSC இ-கவர்னன்ஸ் சர்வீசஸ் இந்தியா லிமிடெட் (CSC-SPV) நிறுவனத்தின் கீழ் திட்ட மேலாண்மை பிரிவு ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தை செயல்படுத்த, நிர்வகிக்க மற்றும் கண்காணிக்க MeitY -க்கு PMU தேவையான ஆதரவுகளை வழங்கும். CSC-SPV: PMU பின்வரும் முக்கிய பணிகள்/நடவடிக்கைகளை மேற்கொள்ளும்:

i. ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு, முழு திட்டத்தையும் செயல்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல்

ii. PMGDISHA போன்ற செயல்திட்டங்களில் ஈடுபட்டுள்ள தொழில்துறைகள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் போன்ற பிற பங்குதாரர்கள் உட்பட பல்வேறு பங்குதாரர்களுடன் ஒத்துழைத்தல்

iii. பல்வேறு பங்குதாரர்கள்/நிபுணர்கள் ஆலோசனையுடன் பாடத்திட்டத்தின் கட்டமைப்பு/பல மொழிகளில் பாடத்தை உருவாக்குதல்

iv. NIELIT, IGNOU, NIOS போன்ற அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் ஆலோசனையில் பயிற்சி உள்கட்டமைப்பு, ஆய்வகங்கள், ஆசிரியர்கள்/பயிற்சியாளர்கள் முதலியற்றின் அடிப்படையில் பயிற்சி நிறுவனங்களின் சான்றிதழ்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளை தயாரித்தல். மேலும் வழங்கப்படும் பயிற்சியின் தரம், ஆசிரியர்கள், பயிற்சி மையம் முதலியவற்றின் உள்கட்டமைப்பு போன்றவற்றை அவ்வப்போது கண்காணிப்பதற்கான மற்றும் மதிப்பிடுவதற்கான விதிமுறைகளை தயாரித்தல்.

v. பயனாளி தேர்வு, பயிற்சியாளரின் ரிஜிஸ்ட்ரேசன் மற்றும் பயிற்சியை கண்காணிப்பதற்கான விதிமுறைகளை உருவாக்குதல்.

vi. சான்றளிக்கும் நிறுவனங்களின் ஆலோசனையில் தேர்வு மற்றும் சான்றிதழுக்கான விதிமுறைகளை தயாரித்தல்.

vii. மொபைல் போன்கள் மூலம் மின் பாடத்திட்டத்தை வழங்குதல்

viii. இத்திட்டம் குறித்த விழிப்புணர்வை உருவாக்க பல்வேறு பங்குதாரர்களுக்கு கருத்தரங்குகள் மற்றும் பிற விழிப்புணர்வு கூட்டங்களை நடத்துதல்

ix. இரண்டு விதமான பதிவை தவிர்க்க மற்றும் முறையான கண்காணிப்பை உறுதிப்படுத்த ஆதார் அடையாள அடிப்படையில் தகுந்த கண்காணிப்பு அமைப்பை உருவாக்குதல்.

x. திட்டத்தை கண்காணித்து அவ்வப்போது MeitY மற்றும் மாநில அரசு/மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல்களை வழங்குதல்.

xi. வழங்க வேண்டிய அனைத்தும் ஒதுக்கப்பட்ட காலகட்டத்திற்குள் மற்றும் பட்ஜெட்டிற்குள் முடிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துதல். தோன்றும் மாறுபாடு எதுவாயினும் ஒப்புதல்கள் பெறுவதற்காக MeitY-யிடம் சமர்ப்பித்தல்.

xii. ஆதார் இணைக்கப்பட்ட ரிஜிஸ்ட்ரேசன் மற்றும் பயனாளிகளின் பரிட்சைக்கு தகுந்த முறையை ஏற்படுத்துதல்

xiii. MeitY இன் ஒப்புதலுடன் மூன்றாம் தரப்பு மூலம் திட்டம் குறித்த உரிய பாதிப்பு மதிப்பீடு ஆய்வு(கள்).

xiv. திறந்த மூல தொழில்நுட்பங்களை பயன்படுத்தி திட்டத்தை மையப்படுத்திய போர்டலை உருவாக்குதல். போர்டலில் பின்வரும் உள்ளடக்க மேலாண்மை அமைப்பு அடங்கும் i) பயிற்சி பங்காளர்/மையமாக சேர்வதற்கான ஆன்லைன் விண்ணப்ப ஆவணங்கள் ii) டேஷ்போர்டு அணுகல் iii) பயிற்சியாளர்களின் பதிவு/புதுப்பிப்பு iv) பாடத்தின் மத்திய சேமிப்பு v) ஆதார் முறையில் தொலைதூர கண்காணிப்பில் டிஜிட்டல் கல்வியை மதிப்பிடுதல் மற்றும் சான்றிதழ் வழங்குதல் vi) தரவு அணுகலுக்கு பயிற்சியளித்தல் மற்றும் vii) தகவல் தெரிவித்தல்.

xv. பட்டியலிடப்பட்டுள்ள 22 இந்திய மொழிகளில் பயிற்சி பாடங்கள் கிடைக்கும் வகையில் மொபைல் ஆப்ஸை உருவாக்குதல்

xvi. பின்வரும் செயல்முறைகளுக்கான ஸ்டேண்டர்டு ஆப்ரேட்டிங் புரஸிஜர் கிடைக்கும்:

- PMGDISHA -இன் கீழ் பயிற்சியாளர்களின் பதிவு மற்றும் பயிற்சி
- PMGDISHA இன்கீழ் பயிற்சி பங்காளரை/மையத்தை சேர்த்தல் /நீக்குதல்
- PMGDISHA தேர்வு
- PMGDISHA பணம் செலுத்தும் செயல்முறை

xvii. MeitY இன் செயலாளர் தலைமையிலான CSC-SPV குழு செயல்படுத்தபடுத்தப்பட்ட திட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்யும்.

**9.13.3 மாநில/யூனியன் பிரதேச அரசுகள்:**

**(i)** **மாநில அளவிலான குழு** செயல்படுத்துவதற்கான உத்திகளை திட்டமிடும் முதன்மைச் செயலர் (தகவல் தொழில்நுட்பம்) தலைமையில் அமைக்கப்படும். **இணைப்பு-II இன் பத்தி I** இல் குழுவின் குறிப்பு சேர்க்கை மற்றும் விதிமுறைகள்.

**(ii)** **மாநில அமுலாக்க நிறுவனம் (SIA):** மாநில/யூனியன் பிரதேச அரசுகள் குறிப்பிட்ட காலத்திற்குள் இலக்குகளை அடைவதற்காக நியமிக்கப்பட்ட செயலாக்க நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த முக்கிய பங்கு வகிக்க வேண்டுமென திட்டமிட்டுள்ளது. நியமிக்கப்பட்ட செயலாக்க நிறுவனத்தின் மூலம் மாநில மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆற்ற வேண்டிய பங்கு பின்வருமாறு:

i. இத்திட்டத்தை செயல்படுத்த மாநில/யூனியன் பிரதேச அரசின் சார்பில் CSC-SPV உடன் SIA ஆனது MoU-விற்குள் நுழையும்.

ii. மாநிலங்கள்/யூனியன் பிரதேச அரசுளிடம் உள்ள ஆதாரங்களை CSC-SPV உடன் பகிர்ந்துகொள்ள உதவுதுல்.

iii. தகுதியான பயிற்சியாளர்களை கண்டறிய மற்றும் தேர்ந்தெடுக்க பல்வேறு நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல், தொடர்பு கொள்ளுதல் மற்றும் ஒத்துழைத்தல்

iv. இத்திட்டத்தை கண்காணிக்க பல்வேறு மாநில/மாவட்ட/பஞ்சாயத்து குழுக்களை உருவாக்குவதற்காக பல்வேறு நிறுவனங்கள்/பங்குதாரர்களுடன் ஒருங்கிணைதல், தொடர்பு கொள்ளுதல் மற்றும் ஒத்துழைத்தல்

v. பஞ்சாயத்துகளில் இத்திட்டத்தை உண்மையாக செயல்படுத்த பயிற்சி நிறுவனங்களுடன் (CSC-SPV இன் ஆலோசனையில்) ஒருங்கிணைதல், தொடர்பு கொள்ளுதல் மற்றும் ஒத்துழைத்தல்.

vi. அருகிலுள்ள டிஜிட்டல் கல்வி பயிற்சி மையங்களுக்கு பயிற்சியாளர் செல்ல உதவுதல்.

(iii) **மாவட்ட அளவிலான குழு** வட்டார அளவில் செயல்படுத்தப்பட்ட திட்டத்தை மேற்பார்வையிட/ கண்காணிக்க மாவட்ட நீதிபதி/கலெக்டர் தலைமையில் அமைக்கப்படுகிறது. **இணைப்பு-II இன் பத்தி II** இல் குழுவின் குறிப்பு சேர்க்கை மற்றும் விதிமுறைகள்.

**9.13.4 NIELIT, NIOS, HKCL, ICTACT, NIESBUD முதலிய சான்றளிக்கும் நிறுவனங்கள்:**

i. CSC-SPV இன் ஆலோசனையில் டிஜிட்டல் கல்வி பயிற்சிக்கான வடிவமைப்பு, உருவாக்கம், வழங்குதல் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் ஆகியவற்றுக்கான ஒரு அமைப்பு, நிலையான விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளை தயாரித்தல்.

ii. டிஜிட்டல் கல்வி தொடர்பாக பயனாளர் பெற்ற திறமையை மதிப்பிடுதல் மற்றும் சான்றிதழ் வழங்குதல்.

**9.13.5** இத்திட்டத்தை செயல்படுத்துவதில் பயிற்சியளிப்பதற்காக மற்றும் உத்வேகத்துடன் பங்கெடுப்பதற்காக அரசு/தனியார் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஈடுபாட்டை CSC-SPV ஆய்வு செய்யும்.

## 10.0 டிஜிட்டல் கல்வி பயிற்சி மற்றும் பயிற்சி காலம்:

### 10.1 பாடத்தின் பரந்த பொருளடக்க சுருக்கம்:

| **பாடப்பிரிவின் பெயர்** |
|---|
| டிஜிட்டல் சாதனங்கள் அறிமுகம் |
| டிஜிட்டல் சாதனங்களை இயக்குதல் |
| இன்டர்நெட் அறிமுகம் |
| இன்டர்நெட்டை பயன்படுத்தி தொடர்புகொள்ளுதல் |
| இன்டர்நெட்டின் பயன்பாடுகள்<br>(குடிமக்களை மையப்படுத்திய சேவைகள் பணமில்லா பரிவர்த்தனைகளை செய்வதற்காக டிஜிட்டல் நிதி ஆயுதங்களை பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்) |
| **மொத்த நேரம்: 20 மணிநேரம்** |

### 10.2 கற்றல் முடிவுகள்/ தேர்ச்சி நிலைகள்:

- டிஜிட்டல் சாதனங்களின் அடிப்படைகளை (துறை ரிதியான சொற்கள், செயல்படும் முறை மற்றும் செயல்பாடு) புரிந்துகொள்ளுதல்
- தகவல்களை பெற, உருவாக்க, நிர்வகிக்க மற்றும் பகிர்ந்துகொள்ள தகவல் டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்துதல்
- ஒரு பயனுள்ள மற்றும் பொறுப்பான முறையில் புரவுஸ் பண்ண இன்டர்நெட்டை பயன்படுத்துதல்
- திறம்பட தொடர்புகொள்ள தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்
- டிஜிட்டல் நிதி ஆயுதங்களை பயன்படுத்தி (USSD/ HPI/ இ-வாலட்/ AEPS/ அட்டை/ PoS) பணமில்லா பரிவர்த்தனைகளை செய்தல்
- டிஜிட்டல் லாக்கரை பயன்படுத்துதல்
- குடிமக்களை மையப்படுத்திய ஆன்லைன் சேவைகளை பயன்படுத்துதல்
- அன்றாட வாழ்க்கையில், சமூக வாழ்க்கையில் மற்றும் வேலையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பங்கை பாராட்டுதல்

10.3 பாடத்தின் உள்ளடக்கத்தை உருவாக்குதல்/தொகுத்தல்/ மேலாண்மை/ திரட்டுதல் - பொருளடக்க வங்கி உருவாக்குதல் போன்றவற்றை பின்வருபவற்றின் படி பல்வேறு பங்குதாரர்களின் ஆலோசனையுடன் CSC-SPV செய்யும்:

i. டிஜிட்டல் கல்வி பயிற்சி நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட பாடத்தின் உள்ளடக்கம் இந்தியாவில் ஆங்கிலம் போக பட்டியலிடப்பட்ட 22 இந்திய மொழிகளிலும் கிடைக்கும். ஒரு மொபைல் ஆப்ஸ் பட்டியலிடப்பட்ட 22 மொழிகளில் கிடைக்கும் இதனால் தேவைப்படும் போது பயிற்சி பாடத்தை டவுண்லோடு செய்து மீண்டும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ii. எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்காக ஆடியோ/வீடியோ/தொடுதல் அடிப்படையிலான பாட முறைகள் உருவாக்கப்படும். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு எழுத்துப்பூர்வமான, உரை நடை, ஆடியோ, வீடியோ மற்றும் செயலிகள் அடிப்படையிலான பாட முறைகள் கிடைக்கும். உள்ளூர் /மொழிமாற்று ஆதாரங்களை பயன்படுத்தி இலக்கிடப்பட்ட பயனாளிகளுக்கு குறிப்பிட்ட பாட உள்ளடக்கங்களை வடிவமைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

iii. கீழே குறிப்பிடப்பட்டுள்ளது போல உயர்மட்ட குடிமக்களை மையப்படுத்திய திட்டங்கள் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது:
- G2C சேவைகள் - ஜாதி சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ்
- UIDAI சேவைகள்
- வங்கி சேவைகள்
- IRCTC- ரயில்வே ரிசர்வேசன்
- இன்சூரன்ஸ்
- தொலைபேசி/டேட்டா கார்டு ரிசார்ஜ்
- வாக்காளர் அடையாள அட்டை அச்சிடுதல்
- மின்சார கட்டணம் செலுத்துதல்
- பான் கார்டு
- பாஸ்போர்ட்

iv. மொபைல் போன்கள் மூலம் பணமில்லா பரிவர்த்தனைகளை செய்வதை ஊக்குவிப்பதே அரசின் நோக்கமாக இருப்பதனால், பாடப் பயிற்சியின் உள்ளடக்கமானது டிஜிட்டல் வாலட், மொபைல் பேங்கிங், சீராக பணம் செலுத்தும் முறை (HPI), கட்டமைக்கப்படாத துணை சேவை தரவு (USSD) மற்றும் ஆதார் இணைப்பில் பணம் செலுத்தும் முறை (AEPS), PoS முதலியவற்றை வலியுறுத்தும்.

v. பாடத்தின் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்காக பயனாளிகள் மற்றும் பயிற்சியாளர்களிடம் உரிய கருத்துக்களை கேட்டு அவர்களின் தேவைக்கேற்ப மாற்றப்படும்.

vi. இன்டர்நெட் புரவுஸரை திறத்தல், தகவல்களை தேடுதல், ஆடியோ மற்றும் வீடியோவை கேட்டல் மற்றும் பார்த்தல் போன்ற பல்வேறு பயன்பாடுகளை செய்து பார்ப்பதற்கான டிஜிட்டல் அணுகல் சாதனத்தை (கம்ப்யூட்டர்கள், டேப்லட்கள் முதலியவை) பயன்படுத்த/இயக்க வலியுறுத்தப்படும்.

vii. இத்துறையிலுள்ள பல நிறுவனங்கள் உருவாக்கிய பிற டிஜிட்டல் கல்வி பயிற்சிகளும் டிஜிட்டல் கல்வி பயிற்சியளிப்பதாக கருதப்படும்.

viii. NIELIT, IGNOU, NIOS, UNESCO, DEF, மாற்றத்துக்கான IT, IIMC, INTEL, NASSCOM, NIIT, PMGDISHA பங்காளர்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கிய CSC-SPV அமைத்த ஒரு தொழில்நுட்ப குழு பாடத்தின் உள்ளடக்கத்திற்கு ஒப்புதல் அளிக்கும். குறிப்பாக கிராமப்புற மக்களுக்காக பாடத்தின் உள்ளடக்கத்தை CSC-SPV பல மொழிகளில் உருவாக்கும்.

**11.0 நிதி உதவி:**

11.1 **பயிற்சி கட்டணம்:** பயிற்சி பங்காளர்கள்/மையங்கள் பயிற்றுவித்த பயிற்சியாளர்கள் வெற்றிகரமாக முடித்து சான்றிதழ் பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சி கட்டணமாக ரூ. 300/- CSC-SPV மூலமாக பயிற்சி பங்காளர்கள்/மையங்களுக்கு நேரடியாக செலுத்தப்படும்.

மேலேயுள்ள நிறுவனங்களின் கட்டணத்தை ரிலீஸ் செய்வது DeGS -யின் கருத்துக்கணிப்பு/பங்களிப்புடன் அடைந்த முடிவுகளின் அடிப்படையில் இருக்கும். சொந்த இமெயில் அக்கவுண்டை உருவாக்குதல், இமெயில் அனுப்புதல், ஒரு டிஜிட்டல் லாக்கரை திறத்தல், ரயில் டிக்கெட்டை ஆன்லைனில் புக் பண்ணுதல், மின்சாரம்/தண்ணீர் கட்டணங்களை ஆன்லைனில் செலுத்துதல், பாஸ்போர்ட் விண்ணப்பித்தல், ஒரு டிஜிட்டல் கட்டணத்தை உருவாக்குதல் அல்லது பயிற்சியாளரின் e-KYC இணக்கத்தை செயல்படுத்துதல், பான் கார்டு, மொபைல் ரிசார்ஜ்,

AEPS/USSD/HPI/e-வாலட் முதலிய பயன்பாட்டிற்கு விண்ணப்பித்தல் போன்ற G2C சேவைகளை அனுகுதல் முதலியவைகள் இதில் அடங்கும்.

11.2 **தேர்வுக் கட்டணம்/சான்றிதழ் கட்டணம்:** ஒரு பயிற்சியாளருக்கான தேர்வு கட்டணம் ரூ. 70/- ஆகும். இந்த கட்டணம் பயிற்சியாளர்களை மதிப்பீடு செய்ததற்காக மற்றும் சான்றிதழ் வழங்கியதற்காக முறையாக பதிவு செய்த சான்றளிக்கும் நிறுவனங்களுக்கு நேரடியாக செலுத்தப்படும்.

11.3 **மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் நிதி உதவி:** மாநில அமுலாக்க நிறுவனங்களுக்கு அவற்றின் நிர்வாகச் செலவுகளை சந்திக்க மற்றும் திட்டத்ததை கண்காணிக்க ஒரு பயிற்சியாளருக்கு சராசரியாக CSC-SPV மூலம் ரூ. 2/- வழங்கப்படுகிறது.

12. **தாக்க மதிப்பீட்டு ஆய்வு:** தாக்க மதிப்பீட்டு ஆய்வு(கள்) ஒரு பாரபட்சமற்ற மூன்றாம் தரப்பினரால் நடத்தப்படும். எலக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ஆய்வு செய்ய தகுதியான நிறுவனங்களை ஈடுபடுத்தும்.

13. **திட்டத்தின் சமூக தணிக்கை** ஆனது அந்தந்த மாநிலங்கள்/மாவட்டங்கள்/தாலுகாக்கள் (வட்டங்கள்)/ கிராம பஞ்சாயத்துக்களில் உள்ள பள்ளி முதல்வர்கள், கல்வியாளர்களை பயன்படுத்தி CSC-SPV மூலம் செய்யப்படும். குறிப்பிட்ட கால அடிப்படையில் இத்திட்டத்துக்கு சமூக மற்றும் பலனுக்கான மதிப்பீட்டை செய்ய பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகளுடன் CSC-SPV இணைவது குறித்து ஆராயும்.

14. இத்திட்டத்தின் கீழ் வரும் 6 கோடி பயனாளிகள் அனைவரின் விவரங்களும் நாட்டின் திறன்/வேலைவாய்ப்பு சூழல் அமைப்பை வலுப்படுத்த செயல்படுத்தப்பட்ட பிற திறன் வளர்ச்சி திட்டங்களுடன் இணைந்துள்ள M/o திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்முனைவு, மாநில திறன் மேம்பாட்டு திட்டங்கள், துறை திறன் ஆணையங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும்.

**இணைப்பு-I**

**டிஜிட்டல் கல்விக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில/யூனியன் பிரதேச வாரியான இலக்குகள்**

| வ.எண். | மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் | இலக்கு |
|---|---|---|
| 1 | உத்தரப் பிரதேசம் | 11171000 |
| 2 | பீகார் | 6630000 |
| 3 | மேற்கு வங்கம் | 4481000 |
| 4 | மகாராஷ்டிரா | 4433000 |
| 5 | மத்தியப் பிரதேசம் | 3784000 |
| 6 | ராஜஸ்தான் | 3712000 |
| 7 | கர்நாடகா | 2705000 |
| 8 | தமிழ்நாடு | 2679000 |
| 9 | ஒரிசா | 2517000 |
| 10 | குஜராத் | 2497000 |
| 11 | ஆந்திரப் பிரதேசம் | 2028000 |
| 12 | தெலுங்கானா | 2028000 |
| 13 | அசாம் | 1929000 |
| 14 | ஜார்க்கண்ட் | 1803000 |
| 15 | சத்தீஸ்கர் | 1412000 |
| 16 | கேரளா | 1257000 |
| 17 | பஞ்சாப் | 1247000 |
| 18 | அரியானா | 1191000 |
| 19 | ஜம்மு காஷ்மீர் | 658000 |
| 20 | உத்தரகண்ட் | 506000 |
| 21 | இமாசலப் பிரதேசம் | 444000 |
| 22 | திரிபுரா | 195000 |
| 23 | மேகலாயா | 171000 |
| 24 | மணிப்பூர் | 137000 |

| | | |
|---|---|---|
| 25 | நாகாலாந்து | 101000 |
| 26 | அருணாசலப் பிரதேசம் | 77000 |
| 27 | கோவா | 40000 |
| 28 | மிசோராம் | 38000 |
| 29 | சிக்கிம் | 33000 |
| 30 | தில்லி ஹேவு | 30000 |
| 31 | புதுச்சேரி | 28000 |
| 32 | அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் | 18000 |
| 33 | தாத்ரா மற்றும் நகர் ஹாவேலி | 13000 |
| 34 | டாமன் மற்றும் டையு | 4000 |
| 35 | சண்டிகர் | 2000 |
| 36 | லட்சத்தீவுகள் | 1000 |
| | **மொத்தம்** | **60000000** |

**குறிப்பு: செயல்திறனை பொறுத்து மாநில/யூனியன் பிரதேசத்திற்கான இலக்குகள் மாறுபடலாம்**

நகர்ப்புற கூட்டமைப்பின் கீழ் வரும் நகரங்கள் இத்திட்டத்தில் சேராது (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

**இத்திட்டத்தின் கீழ் நகரங்களின் பட்டியல்**

| வ.எண் | மாநிலத்தின் பெயர் | நகரின் பெயர் | நகர மக்கள் தொகை (2011 ஆம் ஆண்டு இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) |
|---|---|---|---|
| 1 | மகாராஷ்டிரா: | கிரேட்டர் மும்பை (முனிசிபல் கார்ப்ரேசன்) | 1,24,78,447 |
| 2 | தில்லி NCT | DMC (U) (முனிசிபல் கார்ப்ரேசன்) | 1,10,07,835 |
| 3 | கர்நாடகா | புருகத் பெங்களூரு மகாநகர பலிகே (BBMP) (முனிசிபல் கார்ப்ரேசன்) | 84,25,970 |
| 4 | ஆந்திரப் பிரதேசம் | கிரேட்டர் ஹைதராபாத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 68,09,970 |
| 5 | குஜராத் | அகமதாபாத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 55,70,585 |
| 6 | தமிழ்நாடு | சென்னை (முனிசிபல் கார்ப்ரேசன்) | 46,81,087 |
| 7 | மேற்கு வங்கம் | கொல்கத்தா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 44,86,679 |
| 8 | குஜராத் | சூரத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 44,62,002 |
| 9 | மகாராஷ்டிரா: | புனே (முனிசிபல் கார்ப்ரேசன்) | 31,15,431 |
| 10 | ராஜஸ்தான் | ஜெய்ப்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 30,73,350 |
| 11 | உத்தரப் பிரதேசம் | லக்னோ (முனிசிபல் கார்ப்ரேசன்) | 28,15,601 |
| 12 | உத்தரப் பிரதேசம் | கான்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 27,67,031 |
| 13 | மகாராஷ்டிரா: | நாக்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 24,05,421 |
| 14 | மத்தியப் பிரதேசம் | இந்தூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 19,60,631 |
| 15 | மகாராஷ்டிரா: | தானே (முனிசிபல் கார்ப்ரேசன்) | 18,18,872 |
| 16 | மத்தியப் பிரதேசம் | போபால் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 17,95,648 |

| | | | |
|---|---|---|---|
| 17 | ஆந்திரப் பிரதேசம் | கிரேட்டர் விசாகப்பட்டினம் முனிசிபல் கார்ப்பரேசன் | 17,30,320 |
| 18 | மகாராஷ்டிரா: | பிம்ப்ரி-சின்ச்வாட் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 17,29,359 |
| 19 | பீகார் | பாட்னா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 16,83,200 |
| 20 | குஜராத் | வதோதரா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 16,66,703 |
| 21 | பஞ்சாப் | லூதியானா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 16,13,878 |
| 22 | உத்தரப் பிரதேசம் | ஆக்ரா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 15,74,542 |
| 23 | மகாராஷ்டிரா: | நாசிக் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 14,86,973 |
| 24 | அரியானா | பரிதாபாத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 14,04,653 |
| 25 | உத்தரப் பிரதேசம் | மீரட் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 13,09,023 |
| 26 | குஜராத் | ராஜ்கோட் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 12,86,995 |
| 27 | மகாராஷ்டிரா: | கல்யாண்-டோம்பிவலி (முனிசிபல் கார்ப்ரேசன்) | 12,46,381 |
| 28 | மகாராஷ்டிரா: | வசாய் விரார் நகரம் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 12,21,233 |
| 29 | உத்தரப் பிரதேசம் | வாரணாசி (முனிசிபல் கார்ப்ரேசன்) | 12,01,815 |
| 30 | ஜம்மு காஷ்மீர் | ஸ்ரிநகர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,92,792 |
| 31 | மகாராஷ்டிரா: | அவுரங்காபாத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,71,330 |
| 32 | ஜார்க்கண்ட் | தன்பத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,61,561 |
| 33 | பஞ்சாப் | அமிர்தசரஸ் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,32,761 |
| 34 | மகாராஷ்டிரா: | நவி மும்பை (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,19,477 |
| 35 | உத்தரப் பிரதேசம் | அலகாபாத் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 11,17,094 |
| 36 | ஜார்க்கண்ட் | ராஞ்சி (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,73,440 |
| 37 | மேற்கு வங்கம் | ஹவுரா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,72,161 |
| 38 | தமிழ்நாடு | கோயம்புத்தூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,61,447 |
| 39 | மத்தியப் பிரதேசம் | ஜபல்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,54,336 |
| 40 | மத்தியப் பிரதேசம் | குவாலியர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,53,505 |
| 41 | ஆந்திரப் பிரதேசம் | விஜயவாடா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,48,240 |
| 42 | ராஜஸ்தான் | ஜோத்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,33,918 |
| 43 | தமிழ்நாடு | மதுரை (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,16,885 |
| 44 | சத்தீஸ்கர் | ராய்ப்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,10,087 |
| 45 | ராஜஸ்தான் | கோட்டா (முனிசிபல் கார்ப்ரேசன்) | 10,01,365 |
| 46 | அசாம் | கவுகாத்தி (முனிசிபல் கார்ப்ரேசன்) | 9,63,429 |
| 47 | சண்டிகர் | சண்டிகர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 9,60,787 |

| | | | |
|---|---|---|---|
| 48 | மகாராஷ்டிரா: | சோலாப்பூர் (முனிசிபல் கார்ப்ரேசன்) | 9,51,118 |
| 49 | கர்நாடகா | ஹுப்ளி-தார்வாட் * (முனிசிபல் கார்ப்ரேசன்) | 9,43,857 |
| 50 | உத்தரப் பிரதேசம் | பரேலி (முனிசிபல் கார்ப்ரேசன்) | 8,98,167 |

**இணைப்பு-II**

## PMGDISHA திட்டத்தின் கீழ் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் அமைக்கும் செயற்குழு

**I. மாநில அளவிலான செயற்குழு - [மாநிலத்தின் தலைமைச் செயலாளர்/யூனியன் பிரதேச நிர்வாகியால் அமைக்கப்பட வேண்டும்]**

**சேர்க்கை**

**தலைவர் - முதன்மைச் செயலதிகாரி (தகவல் தொழில்நுட்பம்)**
**உறுப்பினர்கள்:**

1. அடிப்படை கல்வித் துறை பிரதிநிதி
2. பஞ்சாயத்து ராஜ் பிரதிநிதி
3. சமூக நலத்துறை பிரதிநிதி
4. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு பிரதிநிதி
5. மாநில அமுலாக்க நிறுவ பிரதிநிதி (SIA)
6. மாநில தகவல் அதிகாரி -SIO, NIC
7. CSC-SPV பிரதிநிதி
8. சிறப்புச் செயலாளர் (தகவல் தொழில்நுட்பம்)/இணைச் செயலர் (தகவல் தொழில்நுட்பம்) - செயல் உறுப்பினர்

- குழுவின் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்பது உகந்ததாக கருதப்படுவதனால் தலைவர் அனுமதியுடன் குழுவானது இதுபோன்ற பிற நபர்களை தேர்ந்தெடுக்கலாம் அல்லது அழைக்கலாம்.

**குழுவின் விதிகள்**

- குழுவின் விதிகள் பின்வருமாறு:
  - மாநிலத்தில் PMGDISHA திட்டம் செயல்படுத்தப் பட்டிருப்பதை வழக்கமாக கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்
  - மாநிலத்தில் திட்டத்தை செயல்படுத்த பயன்படுத்தப்படும் பயிற்சி மையங்கள்/பங்காளர்கள் எழுப்பும் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பின்தொடர் நடவடிக்கையை பரிந்துரைத்தல்
  - மாநிலத்தில் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான பிற பிரச்சினைகள்
- குழுவை குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்ட வேண்டும்.

**II. மாவட்ட அளவிலான குழு - [அந்தந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தால் அமைக்கப்பட வேண்டும்]**

**சேர்க்கை**

**தலைவர் - மாவட்ட நீதிபதி/கலெக்டர்**
**உறுப்பினர்கள்:**

1. அடிப்படை கல்வித் துறை பிரதிநிதி
2. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு பிரதிநிதி
3. மாநில அமுலாக்க நிறுவன பிரதிநிதி (SIA)
4. மாவட்ட இ-கவர்னன்ஸ் சமூக பிரதிநிதி
5. மாவட்ட தகவலியல் அலுவலர் (DIO)- NIC
6. வட்டார வளர்ச்சி அலுவலர்
7. தலைவர்- ஜில்லா/மாவட்ட ஊராட்சி

8. CSC-SPV மாவட்ட ஒருங்கிணைப்பாளர் - செயல் உறுப்பினர்

- குழுவின் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்பது உகந்ததாக கருதப்படுவதனால் தலைவர் அனுமதியுடன் குழுவானது இதுபோன்ற பிற நபர்களை தேர்ந்தெடுக்கலாம் அல்லது அழைக்கலாம்.

<u>**குழுவின் விதிகள்**</u>

- **குழுவின் விதிகள்** பின்வருமாறு:
  - அடி மட்ட அளவில் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்/கண்காணித்தல்
  -மாவட்ட/வட்டார அளவில் திட்டத்தை செயல்படுத்த பயன்படுத்தப்படும் பயிற்சி மையங்கள்/பங்காளர்கள் எழுப்பும் மற்றும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த பின்தொடர் நடவடிக்கையை பரிந்துரைத்தல்
  - மாவட்டத்தில்/வட்டாரத்தில் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான பிற பிரச்சினைகள்
- மாவட்ட அளவிலான குழுவை குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்ட வேண்டும்.